மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
வலங்கைமான்.

**முன்னிலை :- திரு. P. ஜேசுபாலன், M. A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்.
வலங்கைமான்.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ம் நாள் திங்கட்கிழமை

**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 14/2025**

**குற்ற எண். 407/2024**

**CNR No. TNTV09-000264-2025**

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
வலங்கைமான் காவல் நிலையம்,
திருவாரூர் மாவட்டம் ....குற்றமுறையீட்டாளர்.

// எதிர்//

**A.1 கமல்(எ)கமலசேகரன் வயது 43/2026**
த/பெ. அழகர்சாமி,
பெரிய தெரு, ராஜேந்திரநல்லூர்,
வலங்கைமான் தாலுக்கா .

**A.2 வாசு, வயது 54/2026**
த/பெ. முருகையன்,
பெரியதெரு, ஆலங்குடி,
வலங்கைமான் தாலுக்கா ....எதிரிகள்

**2019 ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிகள், விதி 106 ன் கீழ் படியான விபரங்கள்**

| Sl. No. | Name of the Complaint | Name of the accused | Date of Arrest | Date of Release |
|---|---|---|---|---|
| (i) | State Rep. By The Inspector of Police, Valangaiman., | **A1.Kamal@Kamalasekaran S/o. Azhakarsamy**<br><br>**A2. Vasu, S/o. Murugaiyan** | 25.08.2024<br><br>26.08.2024 | 29.08.2024<br><br>29.08.2024 |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:08:37 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| (ii) | Date of filling of the complainant/ final report in the court | **Filing of Complainant**<br>25.08.2024 | **Taken on file**<br>02.05.2025 | |
| (iii) | Date of committal of the cases to the court of sessions | | Nil | |
| (iv) | Date of questioning of the accused U/s. 228, 240, 246 and 251 as the case may be | | 17.07.2025 | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the code. | **Crl.M.P.No.** | **Date of filing** | **Result** |
| | **Nil** | **Nil** | **Nil** | **Nil** |
| (vi) | Date of Examination in Chief and Cross | **Name of the Examination** | **Date of Chief** | **Date of Cross** |
| | P.W.1 | Tamilselvi | 22.09.2025 | 22.09.2025 |
| | P.W.2 | Arivazhagan | 27.10.2025 | 27.10.2025 |
| | P.W.3 | Jeganathan | 27.10.2025 | 27.10.2025 |
| | P.W.4 | Sakthivel | 27.10.2025 | 27.10.2025 |
| | P.W.5 | Guru | 27.10.2025 | 27.10.2025 |
| | P.W.6 | Sarkunam | 27.10.2025 | 27.10.2025 |
| | P.W.7 | Ravi | 10.11.2025 | 10.11.2025 |
| | P.W.8 | Ponniyin Selvan | 05.02.2026 | 05.02.2026 |
| (vii) | Date of examination of the accused U/s. 313 of the Code | | | 16.02.2026 |
| (viii) | Details of abscondance of an accused and his appearance/Production as the case may be: | | | Nil |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | Sessions Court CMP No. | High Court No. and Date of stay | Result |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:08:44 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | Nil | Nil | Nil | Nil |

| | |
|---|---|
| முதலாவதாக | U/s. 296 (b) BNS ன்படி, கடந்த 24.08.2024 அன்று இரவு 22.00 மணியளவில் வழக்கின் 2 வது எதிரியான வாசு ஆகிய உமது தூண்டுதலின் பெயரில் தான் 1 வது எதிரி கமல் புகார்தாரரின் வீட்டின் அருகே சென்று புகார்தாரரை பார்த்து குச்சிகாரி தேவிடிய என தகாத வார்த்தையால் திட்டிய குற்றம் |
| இரண்டாவதாக | U/s. 131 BNS ன் படி, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம், 1 வது எதிரி புகார்தாரரை பார்த்து கொலை வழக்கு சம்மந்தமாக சாட்சி சொன்னால் உன் புருசனை போல் உன்னையும் கொண்றுவிடுவேன் என்று கூறி 1 வது எதிரி புகார்தாரரை கையால் அடித்த குற்றம் |
| மூன்றாவதாக | U/s. 351(3) BNS ன்படி, மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம் புகார்தாரர் சத்தம் போடவே ஊர்க்காரர்கள் வருவதை பார்த்த 1 வது எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காட்டி புகார்தாரரை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிய குற்றம். |
| நான்காவதாக | U/s.49 BNS ன்படி மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக அதே நாள் அதே நேரம் கடந்த 24.08.2024 அன்று இரவு 22.00 மணியளவில் வழக்கின் 2 வது எதிரி தூண்டுதலின் பெயரில் தான் 1 வது எதிரி பிரச்சனை செய்ய தூண்டிய குற்றம். |
| எதிரிகளின் பதில்கள் | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | 1 வது எதிரியின் மீதான 296(b), 131, 351(3) BNS ன் கீழும், 2 வது எதிரியின் மீதான 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் |

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:08:54 +0530

| | |
|---|---|
| | கீழான குற்றச்சாட்டு நிரூபனம் செய்யப்படவில்லை |
| தண்டனை அல்லது உத்தரவு | இவ்வழக்கின் 1 வது எதிரியின் மீது 296(b), 131 மற்றும் 351(3) BNS கீழும், 2 வது எதிரி மீது பிரிவு 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பிரிவு 271(1)BNSS ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது. |

இவ்வழக்கானது 16.02.2026 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை–1 திரு. இளஞ்செழியன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. G. விக்னேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் இன்று (27.04.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

## <u>தீர்ப்புரை</u>

1. <u>அரசுத்தரப்பு வழக்கு:</u>

அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றயிறுதி அறிக்கையில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு, வலங்கைமான் காவல் சரகம் ஆலங்குடி ராஜேந்திரநல்லூர் பெரிய தெருவில் வசித்து வரும் புகார்தாரரான(சாட்சி–1) தமிழ்செல்வியின் கணவர் தெட்சணமூர்த்தி 2014 ம் ஆண்டு அதே ஊரை சேர்ந்த முருகையன் மகன் வாசு மற்றும் செல்லையன் மகன் ரமனி இவர்களின்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:01 +0530

குடும்பத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளார், இந்நிலையில் அவ்வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்லிவிட்டு வந்த தமிழ்செல்வியை 24.08.2024 அன்று இரவு 22.00 மணியளவில் வழக்கின் 2 வது எதிரி வாசு தூண்டுதலின் பெயரில் 1 வது எதிரி கமல்(எ)கமலசேகரன் புகார்தாரரின்(சாட்சி–1) வீட்டின் அருகே சென்று புகார்தாரரை(சாட்சி–1) பார்த்து குச்சிகாரி தேவிடியா கொலை வழக்கு சம்மந்தமாக சாட்சி சொன்னால் உன் புருசனை போல் உன்னையும் கொண்றுவிடுவேன் என்று திட்டி கையால் அடித்தும் கொலைமிரட்டல் விடுத்து குற்றசெயல் புரிந்துள்ளார், எனவே 1 வது எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவு 296(b), 131, 351(3) BNS ன் கீழும், 2 வது எதிரியின் மீது 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட விவரம்:</u>

BNSS பிரிவு 193 ன் கீழ் இவ்வழக்கின் குற்றயிறுதி அறிக்கை வலங்கைமான் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் கடந்த 25.08.2024–ம் தேதியன்று 1 வது எதிரியின் மீது 296(b), 131, 351(3) BNS ன் கீழும், 2 வது எதிரியின் மீது 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி குற்றயிறுதி அறிக்கையானது கடந்த 02.05.2025 ம் தேதி இந்நீதிமன்றக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு BNSS பிரிவின் 227–ன் கீழ் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு அழைப்பானை அனுப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:09:08 +0530

**3. <u>1 முதல் 2 எதிரிகளுக்கு BNSS சட்டப்பிரிவு 230–கீழ் நகல் வழங்கப்பட்டத்தின் விவரம் :</u>**

1 மற்றும் 2 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலை ஆனவுடன் அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு BNSS சட்டப்பிரிவு 230 –ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**4. <u>1 முதல் 2 எதிரிகள் மீது வனைப்பட்ட குற்றச்சாட்டுகளின் விவரம்:</u>**

**4. 1.** 1 மற்றும் 2 எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்டு, இருதரப்பு வாதங்களையும் கேட்டு, வழக்காவணங்களை பரிசீலணை செய்து, இந்நீதிமன்றத்தால் 1 முதல் 2 எதிரிகள் மீது பிரிவு 263BNSS–ன் படி 1 வது எதிரி மீது பிரிவுகள் 296(b), 131, 351(3)–BNS ன் கீழும் 2 வது எதிரியின் மீதான 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டது.

**4.2.** மேற்படி குற்றச்சாட்டுகளை 1 முதல் 2 எதிரிகளிடம் விளக்கி வினவியபோது 1 முதல் 2 எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துரைத்தனர். எனவே அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு அவர்களுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**5. <u>அரசுத்தரப்பு சாட்சியம்:</u>**

அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:14 +0530

6. <u>அரசுத்தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

**6.1. அசா.1 தமிழ்செல்வி** தனது சாட்சியத்தில் தனது கணவரை கடந்த 25.04.2017 ம் வருடம் ரமணி என்பவருடன் தங்களுக்கு இருந்த பிரச்சனையில் அவர் கொலை செய்து விட்டதாகவும், தனது கணவரின் கொலை வழக்கில் ஆஜர் 2 வது எதிரியும் குற்றவாளி ஆவார் எனவும், கடந்த 24.08.2024 ம் தேதி இரவு 09.00 மணியளவில் ஆஜர் எதிரி கமல் போதையில் கிழக்கு மேற்காக நடந்து தகாத வார்த்தைகளால் தன்னை தனது வாசலில் நின்று திட்டியதாகவும், தனது மூன்று மகன்களும் வெளியூரில் வசிக்கிறார்கள் என்றும், கடந்த 7 வருடமாக தான் தனியாகதான் வசித்து வருவதாகவும், பக்கத்தில் உள்ள தனது பங்காளி வீட்டு பேரன் குரு ஆஜர் எதிரி கமலிடம் யாரைதான் பேசுகிறாய் என்று கேட்டதாகவும், அதற்கு ஆஜர் 1 வது எதிரி இவளைத்தான் திட்டுகிறேன் என்று தன்னை காண்பித்து செல்வியைத்தான் திட்டுகிறேன் என்று சொன்னதாகவும், 1 வது எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு கத்தியை காண்பித்து தனது கணவரை அறுத்து போட்டதுபோல் தன்னையும் அறுத்து போட்டுவிடுவேன் என்று சொன்னதாகவும், (சாட்சி அழுதுகொண்டே சாட்சியம் அளிப்பதாகவும்,) ஆஜர் எதிரி தன்னை குச்சிகாரி, தேவுடியா என்று சொல்லமுடியாத வார்த்தைகளால் தன்னை பேசியதாகவும், தனது உறவினர்களும் ஆஜர் 1 வது எதிரி அவரது அம்மா, தம்பி மற்றும் மனைவி ஆகியோர் பிரச்சனையை சமாதானம் செய்து எதிரியை அழைத்து சென்றதாகவும், அன்று இரவு 12.00 மணியளவில் போலீசார் வந்ததாகவும், தான் மறுநாள் காலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் தான்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:21 +0530

கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், (புகார் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.) என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.2. அ.சா.2 அறிவழகன்** தனது சாட்சியத்தில் கடந்த 24.08.2024 ம் தேதி இரவு சுமார் 10, 10.30 மணியளவில் அ.சா. 1 குடியிருக்கும் தெருவிற்கு ஆட்களை வயல் வேலைக்கு அழைப்பதற்காக சென்றதாகவும், அப்போது அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் கேட்டதாகவும், .தான் உடனே என்னடா அண்ணன் வீட்டு வாசலில் சத்தம் கேட்கிறதே என்று அ.சா.1 ன் வீட்டுக்கு சென்றதாகவும், அப்போது ஆஜர் 1 வது எதிரி வாசலில் நின்று கொண்டிருந்த தனது அண்ணியை குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அப்போது ஆஜர் 1 வது எதிரி குடிபோதையில் இருந்ததாகவும், தான் ஆஜர் எதிரியை பார்த்தபோது ஏம்பா இத்தனை மணிக்கு உனக்கு இங்கு என்ன வேலை என்று கேட்டதாகவும், அ.சா.1 இடமும் இவருக்கு என்ன பிரச்சனை ஏன் நம்ம வீட்டு வாசலில் நின்று சத்தம் போடுகிறார் என்று கேட்டதாகவும், அதற்கு அ.சா.1 தன்னிடம் உங்கள் அண்ணன் கொலை செய்யப்பட்டு இறந்த வழக்கில் தன் சாட்சி அளித்து விட்டு வந்தது குறித்து ஆஜர் எதிரி தன்னை பேசுவதாக சொன்னதாகவும், மேற்கண்டவாறு அ.சா.1 தன்னிடம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1வது எதிரி உன் புருசனை அனுப்புன இடத்துக்கே உன்னையும் அனுப்பினால் தான் சரிவருவாய் என்று அ.சா.1 ஐ பார்த்து கூறினார்கள் என்றும், உடனே தான் ஆஜர் 1 வது எதிரியை உனக்கு என்னைய்யா பிரச்சனை என்று சத்தம் போட்டதாகவும்,

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:29 +0530

ஆஜர் 1 வது எதிரி மீண்டும் அ.சா.1 யிடம் பிரச்சனை செய்யும் நோக்கிலேயே நடந்து கொண்டதாகவும், தான் ஆஜர் 1வது எதிரியை அங்கிருந்து கையால் தள்ளிய போது ஆஜர் 1வது எதிரி தனது அண்ணி அ.சா.1 ஐ கண்ணத்தில் அறைந்துவிட்டார் என்றும், அருகில் இருந்த ஜகந்நாதன், ரவி மற்றம் சக்திவேல் மூவரும் ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து இழுத்து அனுப்ப முயற்சி செய்தார்கள் என்றும், ஆஜர் 1 வது எதிரி அப்போது தனது அண்ணியை கத்தியை எடுத்து குத்த வந்ததாகவும், அதற்குள் ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள் என்றும், ஆஜர் 1வது எதிரியை சம்பவயிடத்திலிருந்து அனுப்பி வைத்தார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.3. அ.சா.3 ஜெகநாதன்** தனது சாட்சியத்தில் தான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், அ.சா.1 எனது அண்ணி முறை ஆவார் எனவும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், ஆஜர் எதிரிகள் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 24.08.2024ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் தான் வீட்டிலிருந்ததாகவும், ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார் என்றும், அ.சா.2 ஆஜர் 1 வது எதிரியை மத்திசம் செய்து கொண்டிருந்ததாகவும், தானும் தனது அண்ணன் பேரன் சக்திவேலும் சத்தம் கேட்டுக்கொண்டிருக்கிறது வா போய் பார்ப்போம் என்று அ.சா.1 ன் வீட்டு வாசலுக்கு சென்றதாகவும், தானும் அ.சா.2 உடன் சக்திவேலும் ஆஜர் எதிரியை சத்தம்போடாதே என்று மத்திசம் செய்தோம்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:38 +0530

என்றும், அ.சா.1 ம் ஆஜர் 1வது எதிரி குடிபோதையில் இருந்ததால் நீ போ என்று சொல்லி அவரையும் மத்திசம் செய்து அனுப்பி வைத்தோம் என்றும், ஆஜர் 1 வது எதிரி குடிபோதையில் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.4. அ.சா.4 சக்திவேல்,** தனது சாட்சியத்தில், தனது சாட்சியத்தில் கடந்த 24.08.2024ம் தேதி இரவு சுமார் 10 மணியளவில் தான் வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்ததாகவும், அப்போது ஆஜர் 1வது எதிரி அ.சா.1 ன் வீட்டு வாசலில் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், தானும் தனது தாத்தா அ.சா.3ம் ஆஜர் 1 வது எதிரி சத்தம் போட்டுக் கொண்டிருந்ததை தடுத்ததாகவும், அப்போது ஆஜர் 1 வது எதிரி தன் Case க்கு சாட்சி சொல்ல போனால் உன் புருசனை போட்டது போல் உன்னையும் போட்டு விடுவேன் என்று அ.சா.1 யிடம் சொன்னதாகவும், பேசிக்கொண்டிருக்கும் போதே ஆஜர் 1 வது எதிரி அ.சா.1ன் கண்ணத்தில் அறைந்துவிட்டதாகவும், தானும் தனது தாத்தாவும் ஆஜர் 1 வது எதிரியை சமாதானம் செய்தோம் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.5 அ.சா.5 குரு** தனது சாட்சியத்தில், குரு தனது சாட்சியத்தில் கடந்த 24.08.2024ம் தேதி இரவு 10.00 மணியளவில் தான் வீட்டிலிருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்ததாகவும், மறுநாள் காலை 10.00 மணிக்கு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:46 +0530

வலங்கைமான் போலீசார் அ.சா.1ன் வீட்டிற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றும், போலீசார் வரைபடம் வரைந்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பத்தை போலீசார் 25.08.2024 ம் தேதி சம்பவயிடத்தை பார்வையிட்டு விசாரணை செய்தபோது போட்டுக்கொடுத்தேன் என்றும், தன்னுடன் சர்குணம் என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், (பார்வை மகசர் **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரனை செய்யப்பட்டார்.

**6.6 அ.சா. 6 சர்குணம்** தனது சாட்சியத்தில் கடந்த 24.08.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் தான் தங்கள் ஊரிலுள்ள கோவிலில் இருந்தபோது ஆஜர் 1 வது எதிரி மதுபோதையில் அ.சா.1 வீட்டு வாசலில் நின்றுகொண்டு அ.சா.1 ஐ குச்சிகாரி, தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டிக்கொண்டிருந்ததாகவும், மேலும் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ வாடி போடி என்று பேசியும் அடித்து விட்டதாகவும், ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ பார்த்து உன் புருசனை கொன்றதுபோல் உன்னையும் கொன்றுவிடுவேன் என்று சொன்னதாகவும், தான் ஆஜர் 1 வது எதிரி போ தம்பி என்று சொல்லி அனுப்பி வைத்ததாகவும், அப்போது ஆஜர் 1 வது எதிரி தம்பி ஆனந்தராஜ் என்பவரும் ஆஜர் 1 வது எதிரி மனைவியும் சம்பவயிடத்திற்கு வந்து ஆஜர் 1 வது எதிரியை அழைத்து சென்றார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:09:52 +0530

கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையொப்பத்தை 25.08.2024 ம் தேதி காலை 11.00 மணியளவில் வலங்கைமான் காவல் உதவி ஆய்வாளர் விசாரணை செய்தார் என்றும், மேற்படி கையொப்பத்தை தன்னிடம் பெற்றுக்கொண்டதாகவும், தன்னுடன் குரு என்பவரும் கையொப்பம் செய்தார் என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**6.7 அ.சா. 7 ரவி** தனது சாட்சியத்தில், நான் மேற்படி முகவரியில் வசித்து EB ல் தற்காலிக ஊழியராக பணிபுரிந்து வருவதாகவும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1, ஆஜர் எதிரிகள் தங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்றும், தனக்கு தேதி நியாபகமில்லை என்றும், ஒரு நாள் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ன் வீட்டின் எதிர்புறம் நின்று சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும், தான் ஆஜர் எதிரிகளையும், அ.சா.1 ஐயும் மத்தியஸ்தம் செய்து அனுப்பி வைத்தேன் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

6.8. **அ.சா.8 பொண்ணியின் செல்வன்** தனது சாட்சியத்தில் கடந்த 25.08.2024 ம் தேதி தான் வலங்கைமான் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது தமிழ்செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண் 407/2024 ச/பி. 296, 131, 351(3) BNS ன் கீழ்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:00 +0530

வழக்கு பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் அன்றைய தினமே 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சர்குணம் மற்றும் குரு ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன் என்றும், வரைபடம் **அ.த.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் தமிழ்செல்வி, அறிவழகன், ரவி, ஜெகநாதன், சக்திவேல் பார்வை மகசர் சாட்சிகள் சர்குணம் மற்றும் குரு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 296, 131, 351(3) BNS விலிருந்து 49, 296, 131, 351(3) BNS ஆக பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அனுப்பிவைத்தேன் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது என்றும், பின்னர் சம்பவம் உண்மையென்று தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரி கமல் என்கிற கமலசேகரன் ஆகிய உம்மை ராஜேந்திரநல்லூர் பெரிய தெருவில் உமது வீட்டின் அருகே நின்றுகொண்டிருந்த உம்மை அன்றைய தினமே மதியம் 12.30 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், பின்னர் இவ்வழக்கின் மற்றொரு எதிரி வாசு என்பவரை ஆலங்குடி ஆர்ச் அருகே நின்றுகொண்டிருந்தவரை 26.08.2024 மதியம் 01.00 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்து உரிய நடைமுறைகளுக்கு பின்னர்

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:06 +0530

நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், இத்துடன் தன்னுடைய புலன் விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 1 வது எதிரி மீது ச/பி. 49, 296, 131, 351(3) BNS வின் கீழும், 2 வது எதிரி மீது மீது ச/பி. 49 BNS வின் கீழும் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றும், தன்னுடைய விசாரணையில் அனைத்து சாட்சிகளும் வழக்கு சம்பவத்தை பற்றி கூறியுள்ளனர் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

7. <u>குவிமுச பிரிவு 313(1) (b) ன் படியான விசாரணை:</u>

இவ்வழக்கில் அரசுத்தரப்பால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து 1 முதல் 2 எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து குவிமுச பிரிவு 313(1) (b)ன் கீழ் 1 முதல் 2 எதிரிகளிடம் வினவிய போது 1 முதல் 2 எதிரிகள் மேற்படி சாட்சிகளின் சாட்சியம் பொய் என்று மறுத்துரைத்தனர். மேலும், 1 முதல் 2 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எதுவும் இல்லை என்று தெரிவித்தனர் .

8. <u>1, 2 எதிரிகள் தரப்பு வழக்கு:</u>

1 மற்றும் 2 எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் எதிரிகள் தான் குற்றத்தை செய்தார் என்று நிருப்பிக்க சாட்சியம் எதுவும் இல்லை என்பது எதிரிகள் தரப்பு வாதமாகும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை ஆவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:13 +0530

**9. தீர்வுக்குரிய பிரச்சினை:**

1 மற்றும் 2 எதிரிகள் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பித்துள்ளதா? அவ்வாறு குற்றம் நிருப்பிக்கப்பட்டிருப்பின் 1 மற்றும் 2 எதிரிகளுக்கு கிடைக்கக்கூடிய தண்டனையின் விபரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுகுரிய பிரச்சினையாகும்.

**10. தீர்வு:**

**10.1.** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசுத்தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.8** வரையிலான சாட்சிகளின் சாட்சியம் மற்றும் **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்களின் மூலம் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையால் 1 மற்றும் 2 எதிரிகளை குற்றவாளிகள் என தீர்மானித்து தக்க தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது. 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருப்பிக்கப்படவில்லை என்றும், 1 மற்றும் 2 எதிரிகளை குற்றச்சம்பவத்தோடு தொடர்பு படுத்தும் விதத்தில் எவ்வித சாட்சியமும் இல்லை என்றும், எனவே, 1 மற்றும் 2 எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பு வழங்குமாறு வாதிடப்பட்டது.

**10.2.** 1872ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101ன் கீழ் எதிரிகள் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் சுமை

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:23 +0530

அரசுத்தரப்பைச் சார்ந்தது. அரசுத்தரப்பால் மேற்படி எதிரிகள் மீதான குற்றச்சாட்டினை மெய்ப்பிக்கும் பொருட்டு **அ.சா.1** முதல் **அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.5** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசுத்தரப்பு வழக்கு யாதெனில், வலங்கைமான் காவல் சரகம் ஆலங்குடி ராஜேந்திரநல்லூர் பெரிய தெருவில் வசித்து வரும் புகார்தாரரான தமிழ்செல்வியின் கணவர் தெட்சணமூர்த்தி 2014 ம் ஆண்டு அதே ஊரை சேர்ந்த முருகையன் மகன் வாசு மற்றும் செல்லையன் மகன் ரமனி இவர்களின் குடும்பத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளார், இந்நிலையில் அவ்வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்லிவிட்டு வந்த தமிழ்செல்வியை 24.08.2024 அன்று இரவு 22.00 மணியளவில் வழக்கின் 2 வது எதிரி வாசு தூண்டுதலின் பெயரில் 1 வது எதிரி கமல்(எ)கமலசேகரன் புகார்தாரரின் வீட்டின் அருகே சென்று புகார்தாரரை பார்த்து குச்சிகாரி தேவிடியா கொலை வழக்கு சம்மந்தமாக சாட்சி சொன்னால் உன் புருசனை போல் உன்னையும் கொண்றுவிடுவேன் என்று திட்டி கையால் அடித்தும் கொலைமிரட்டல் விடுத்து குற்றசெயல் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**10.3** உரிய நேரத்தில் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று காண்கையில், இவ்வழக்கின் சம்பவ நாள் 24.08.2024 ம் தேதி இரவு 10 மணி சுமாருக்கு சம்பவம் நடந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. வழக்கின் முதல் தகவல் அறிக்கை 1 நாள் காலதாமதமாக 25.08.2024 ம் தேதி 10.00 மணிக்கு பதிவு

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:31 +0530

செய்யப்பட்டுள்ளது. 1 மற்றும் 2 வது எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளது அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக வாதிட்டார். முதல் தகவல் அறிக்கை காலம் 8 ஐ பரிசீலிக்கையில் குற்றமுறையீட்டாளரால்/தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**10.04 முதலாவதாக,** இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 வது மற்றும் 2 வது எதிரிகள் மீதான 296(b) BNS ன் கீழ் குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட இதச பிரிவு 296(பி)–ன் வரையறைகளை இத்தீர்ப்பில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(i) **294 - "Whoever, to the annoyance of others, -**

(b) sings. recites or utters any obscene songs, ballad or words, in or near any public place,

shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both.

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர், அ..சா.1 தமிழ்செல்வி தான் அளித்துள்ள சாட்சியத்தில் தனது கணவர் தெட்சிணாமூர்த்தியை கொலை செய்த வழக்கில் சாட்சி சொல்லி விட்டு வந்ததற்காக 2 வது எதிரியின் தூண்டுதலின் பேரில் 1 வது எதிரி கமல்(எ)கமலசேகரன் அ.சா.1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவுடியா என்று தகாத வார்த்தைகளால் காமகுரோதமாக திட்டியதாக பிரிவு 296(b)BNS –ன் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கும் வண்ணமாக அரசுத்தரப்பில் சாட்சியம் வழங்கப்பட்டுள்ளது என தன் வாதத்தை முன் வைத்தார்.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:37 +0530

**10.05** கற்றறிந்த எதிர்கள் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின்போது புகார் வாக்குமூலத்தில் கூறி உள்ள ஆபாச வார்த்தைகளை அ..சா.1 தமிழ்செல்வி நீதிமன்ற சாட்சியத்தில் சுட்டிக்காட்டி சாட்சியம் கூறவில்லை என்றும், மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ, அல்லது அதை சுற்றியுள்ள இடத்திலோ 1 வது எதிரியால் உச்சரிக்கப்பட்டதாகவோ மேற்படி ஆபாச வார்த்தைகளால் அ.சா.1 தமிழ்செல்விக்கோ, பிற சாட்சிகளுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அருவறுப்பு ஏற்பட்டதாகவோ சாட்சியம் அளிக்காத நிலையில் 1 வது எதிரிக்கு எதிராக 296(b) BNS பிரிவின் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது என்று தன் வாதத்தை முன் வைத்தார்.

**10.06.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.1 1 வது எதிரி தன்னை குச்சிகாரி தேவிடியா என்று சொல்ல முடியாத வார்த்தைகளால் திட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 அறிவழகன் தனது சாட்சியத்தில் ஆஜர் 1 வது எதிரி வாசலில் நின்று கொண்டிருந்த தனது அண்ணியை குச்சிகாரி தேவிடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டினார் என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ஜெகநாதன் தனது சாட்சியத்தில் ஆஜர் 1 வது எதிரி குடிபோதையில் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் ஆஜர் 1 வது எதிரி தகாத வார்த்தையால் பேசியதாக எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

**10.07** இந்நீதிமன்றம் பிரிவு 296(b)–BNS ல் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்தையும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:44 +0530

மன்றத்தின் பல வழக்குகளில் வழங்கியுள்ள வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களின் படியும், மேற்படி இவ்வழக்கின் சாட்சியத்தை கருத்தில் கொள்ளும்போது அரசுத்தரப்பில் அரசு வழக்கு சாட்சிகள் கூறுவதுபோல் ஆபாச வார்த்தையை உச்சரித்ததால் மட்டுமே 296(b) BNS பிரிவின் வரையறைகளை ஈர்த்ததாக பொருள்கொள்ள முடியாது. மாறாக எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தில் கூறுவதுபோல் 296(b) BNS பிரிவை ஈர்க்க மேற்படி ஆபாச வார்த்தைகளை பொது இடத்திலோ அல்லது அதன் சுற்றுப்புறத்திலோ எதிரியால் பேசப்பட்டு அதனால் புகார்தாரருக்கோ அல்லது பிறருக்கோ அருவருப்போ அல்லது தொல்லையோ ஏற்பட்டது என்பதற்கு இவ்வழக்கில் சாட்சியங்கள் எதுவும் இல்லாத நிலையில் பிரிவு 296(b)BNS–ன் கீழ் 1 வது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.08 இரண்டாவதாக,** இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 வது எதிரி மீதான பிரிவு 131–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட குற்ற சம்பவத்தில் 1 வது எதிரி ஈடுபட்டாரா என்பதை நிரூபணம் செய்தல் வேண்டும். அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என காணும்போது, இந்த வழக்கின் புகார்தாரரான அ.சா.1. தனது புகாரில் 1 வது எதிரி தன்னை கையால் தாக்கியதாக கூறியுள்ளார் ஆனால் அவரது முதல் விசாரணையிலோ, குறுக்கு விசாரணையிலோ 1 வது எதிரி தன்னை தாக்கியதாக சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.2 மற்றும் அ.சா.4 தங்களது சாட்சியத்தில் ஆஜர் 1 வது எதிரி அ.சா.1 ஐ கண்ணத்தில் அறைந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளனர். இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் 1 வது

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:10:50 +0530

எதிரி அ.சா.1 ஐ தாக்கியதாக சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை இவ்வழக்கின் புகார்தாரரே தனது சாட்சியத்தில் 1 வது எதிரி தன்னை தாக்கியதாக எவ்வித சாட்சியமும் அளிக்காத நிலையில் எதிரி மீதான பிரிவு 131 BNS–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் போதிய ஆதாரங்களுடன் நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10.9 மூன்றாவதாக,** இவ்வழக்கில் 1 வது எதிரி மீது தன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி குற்றமுறு கொலை மிரட்டல் செய்ததாக அரசுத்தரப்பில் குற்றச்சாட்டு பதியப்பட்டுள்ள நிலையில் பிரிவு 351(3)–BNS ன் கீழான வரையறையை இத்தீர்ப்பில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

506. **Punishment for criminal intimidation**, - Whoever commits the offence of criminal intimidation shall be punished with imprisonment of either description for a term which may extend to two years, or with fine, or with both.

1 வது எதிரியின் மீதான குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டிற்கான வரையறைக்கு இதச பிரிவு 503– ன் கீழான வரையறையை இந்நீதிமன்றம் இங்கே சுட்டிக்காட்டுகிறது.

503. Criminal intimidation – Whoever threatens another with any injury to his person, reputation or property, or to the person or reputation of any one in whom that person is interested, with intent to cause alarm to that person, or to cause that person to do any act which he is not legally bound to do, or to omit to do any act which that person is legally entitled to do, as the means of avoiding the execution of such threat, commits criminal intimidation.

**10.10** கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் வாதிடுகையில் பிரிவு 351(3)–

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.04.27 16:10:57 +0530

BNS–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரையறையை சுட்டிக்காட்டி அரசு தரப்பு சாட்சிகள் அவர்களது நீதிமன்ற சாட்சியத்தில் பிரிவு 351(3)–BNS–ன் கீழான வரையறைகளை ஈர்க்கும் வண்ணமாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளனர் என்று வாதிட்டார்.

**10.11.** எதிர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின்போது எதிரிக்கு எதிராக அ.சா.1 தனது முதல் விசாரணையில் 1 வது எதிரி தன்னை குற்றமுறு எண்ணத்துடன் மிரட்டியதாக பிரிவு 351(3) BNS–ஐ ஈர்க்கும் வண்ணமாக எந்த ஒரு உட்கூறும் கூறி சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எதிரிக்கு எதிராக 351(3)–BNS ன் கீழ் அரசுத்தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என தன் வாதத்தை முன் வைத்தார்.

**10.12.** இந்நீதிமன்றம் பிரிவு 351(3)–BNS–ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரையறைகளை கவனமாக படிக்கும்போதும் அ.சா.1–ன் சாட்சியத்தை கவனமாக உற்று பார்க்கும்போதும் அவரது சாட்சியத்தில் 1 வது எதிரி தன்னை குற்றமுறு அச்சுறுத்தல் செய்ததற்கான எந்த ஒரு உட்கூறுகளையும் தனது சாட்சியத்தில் சொல்லவில்லை. மேலும் தனக்கு 1 வது எதிரியின் செய்கையினால் உயிர்போகும் என்ற அச்சமோ அல்லது பீதியோ அல்லது ஆபத்து வருமோ என பயந்ததாக எந்த ஒரு சாட்சியமோ முன்வைக்காத நிலையில் இந்நீதிமன்றம் எதிர் தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதுபோல் பிரிவு 351(3)–BNS ன் கீழான குற்றச்சாட்டு எதிரிக்கு எதிராக அரசுத்தரப்பு வழக்கில் ஈர்க்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:11:34 +0530

**10.13. நான்காவதாக,** இவ்வழக்கில் 2 வது எதிரியின் தூண்டிதலின் பேரில் தான் 1 வது எதிரி மேற்கண்ட செயல்களை செய்தார் என் பிரிவு 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழான குற்றச்சாட்டை பரிசீலனை செய்கையில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலானவர்கள் தங்களது முதல் விசாரணையில் 2 வது எதிரியின் தூண்டுதலின் விளைவாகத்தான் மேற்கண்ட குற்றங்களை 1 வது எதிரி செய்தார் என்பதற்கான எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ சமர்ப்பிக்கப்படவில்லை. ஆகையால், 2 வது எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட சட்டப்பிரிவு 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் ன் கீழான குற்றச்சாட்டானது போதிய ஆதாரத்துடன் அரசுத்தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**11**. மேலே கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது அ.சா.1 ஐ பார்த்து 1 வது எதிரி தகாத வார்த்தையால் திட்டி அவமானத்தை ஏற்படுத்தியதாக கூறியுள்ள 296(b)BNS கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பு உட்கூறுகளை பூர்த்தி செய்யும் விதமாக எவ்வித சாட்சியமும் அளித்து நிரூபிக்கப்படவில்லை என்றும், மேலும் 1–ம் எதிரி அ.சா.1 ஐ தாக்கியதாக கூறியுள்ள 131 BNS ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பால் 1 ம்–எதிரிக்கு எதிராக சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், மேலும் 1 ம் எதிரி வாதியை குற்றமுறு மிரட்டல் விடுத்ததாக பிரிவு 351(3)BNS–ன் கீழான குற்றச்சாட்டு 1 வது எதிரிக்கு எதிராக அரசுத்தரப்பு சந்தேகத்திற்கு இடம்மின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், 2 வது எதிரி தூண்டிவிட்டு அந்த

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:11:42 +0530

தூண்டுதலின் பேரில் தான் 1 வது எதிரி 296(b), 131, 351(3) BNS ஆகிய குற்றங்களை இழைத்ததாக 2 வது எதிரி மீதான பிரிவு 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** இவ்வழக்கின் 1 வது எதிரியின் மீது 296(b), 131 மற்றும் 351(3) BNS கீழும், 2 வது எதிரி மீது பிரிவு 296(b) r/w 49. 131 r/w 49, 351(3) r/w 49 BNS–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு பிரிவு **271(1)BNSS** ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. ஆகவே அதுகுறித்து உத்தரவு ஏதும் இல்லை.

1 வது மற்றும் 2 வது எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்னர் தானாக ரத்தாக வேண்டியது.

இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:11:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

## **<u>இணைப்பு</u>**

**<u>சாட்சிகளின் விபரம்</u>**

**அரசுதரப்பு சாட்சிகள்**

| **தரவரிசை** | **பெயர்** | **வகை** |
|---|---|---|
| அ.சா.1 | தமிழ்செல்வி | புகார்தாரர் மற்றும் காயம்பட்ட நபர் |
| அ.சா.2 | அறிவழகன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | ஜெகநாதன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | சக்திவேல் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | குரு | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.6 | சர்குணம் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.7 | ரவி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.8 | பொன்னியின் செல்வன் | புலன் விசாரணை அதிகாரி |

**எதிரிகள் தரப்பு சாட்சி – இல்லை**
**நீதிமன்ற சாட்சி – இல்லை**

**<u>சான்றாவணங்களின் விபரம்</u>**

**அரசுதரப்பு சான்றாவணங்கள்**

| **வ.எண்** | **சான்றாவண எண்.** | **விபரம்** |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ. 1/அ.சா. 1 | புகார் |
| 2. | அ.த.சா.ஆ.2/அ.சா.5 | பார்வை மகஜர் |
| 3. | அ.சா.ஆ. 3/அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ. 4/அ.சா.8 | மாதிரி வரைபடம் |
| 5. | அ.சா.ஆ. 5/ அ.சா.8 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**1 முதல் 2 எதிரிகள் தரப்பு சான்றாவணம் –இல்லை**
**நீதிமன்ற சான்றாவணம் – இல்லை**
**சான்று பொருள் – இல்லை**

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:11:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

**<u>தீர்ப்புரையின் நகல் :</u>**

1. மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவாரூர் அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கின் முடிவு சம்பந்தப்பட்ட காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் எதிரிகள் நீதிமன்ற விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
3. சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் அழைக்கப்படவில்லை.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.27 16:12:04 +0530